


FREE EDITION

November - 2011

# ஜோதி

ஆன்மிகச் செய்திச்சுடர்

# Jothi

Spiritual Newsletter

ஜோதி 5: சுடர் 09 - 57

மூல மந்திரம்

ஓம் சக்தியே
பராசக்தியே
ஓம் சக்தியே
ஆதி பராசக்தியே
ஓம் சக்தியே
மருவூர் அரசியே
ஓம் சக்தியே
ஓம் விநாயகா
ஓம் சக்தியே
ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே
ஓம் பங்காருகாமாட்சியே
*

**அன்னையின் அருள்வாக்கிலிருந்து..**

## போலி பக்தியினால் நெருங்கமுடியாது

**ஆ**லயத்தை வலம் வரும் போது ஓரளவுதான் காலில் மண் ஒட்டும். ஆலயத்தில் உள்ள மண் முழுவதும் ஒட்டாது. அதுபோல உண்மையான பக்தியினால் தான் அம்மாவை அடைய முடியும். அதிக அளவு மண் ஒட்டவேண்டும் என்பதற்காக ஈரக்கால்களுடன் ஆலயத்தை வலம் வந்தால் மண் ஒட்டாது. மண்ணில் உள்ள அழுக்குதான் ஒட்டும். போலி வேடத்தாலும், பணத்தாலும் அம்மாவைஅடைய முடியாது. காலில் ஒட்டக்கூடிய மண் போன்றவர்கள் அம்மாவின் வார்த்தையைக் கேட்டு நடக்கும் உண்மையான பக்தர்கள். ஈரக்காலில் ஒட்டும் அழுக்கு போன்றவர்கள் கவர்ச்சிக்காக அம்மாவை வழிபடுபவர்கள்.''

## மேல்மருவத்தூர் அன்னையின் அற்புதங்கள்

# அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

**சா**தாரண மனிதர்களாகிய நாமே நமக்குள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாமல் அவதிப்படுகின்றோம். அவ்வாறு புரிந்துகொண்டால் உலகில் போராட்டம் என்ற ஒன்று இருக்கவே முடியாமல் போய்விடும். எத்தனைக் காலம் நெருங்கிப் பழகினாலும், ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருக்கக்கூடிய கணவன், மனைவி, மக்கள் என்பவர்கள் கூட ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியவில்லை.

பல சமயங்களில், ஒருவர் செய்யும் செயல்களைக் குறிப்பிட்டுப் பேசும்போது, “சார்! அவரைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே!” என்று பேசுகின்றோம். நம்மைப் போன்ற சிற்றறிவுடைய மக்களைக்கூட நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், பேராற்றல் வடிவான முழுமுதல் பொருளை எங்ஙனம் புரிந்து கொள்ள முடியும்?

புரிந்துகொள்ள முடியவில்லை என்கிற காரணத்திற்காக ஒன்றை நம்பால் இருக்கத் தொடங்கினால், உலகில் பலவற்றை நம்பாமலேயே விட்டுவிட நேரிடும். நம் அறிவிற்குப் புலப்படாதவை, அப்பாற்பட்டவை எனப் பல உண்டு. அவற்றை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றே இன்றைய விஞ்ஞானம் கூறுகின்றது.

(தொடர்ச்சி 02ஆம் பக்கம்)

# ஆன்மிக முன்னேற்றம் பெற...

**ஆ**ன்மிகத்துறையில் ஈடுபாடுள்ள ஒருவரது உபாசனைக்கு மூன்று அடிப்படை விடயங்கள் தேவை. 1. இஷ்ட தெய்வம், 2. குரு, 3. மந்திரம் என்பன. ஏதாவது ஒரு இஷ்ட தெய்வத்தைத்தான் தேர்ந்தெடுத்து உபாசித்து வர வேண்டும். தியானித்து வர வேண்டும். அப்போதுதான் நீங்கள் விரைந்து முன்னேற முடியும். அந்த முன்னேற்றத்திற்குத் துணை நிற்க ஒரு குருவின் தயவு தேவை.

அந்தக் குரு எந்த மந்திரங்களைக் கூறுகிறாரோ அதனையே உறுதியாகப் பற்றிக்கொண்டு ஆன்ம சாதனங்களில் ஈடுபட்டு வர வேண்டும் - இப்படித்தான் சாத்திரங்கள் கூறுகின்றன.

மந்திரம், குரு, தெய்வம் என்ற மூன்றும் ஓர் உபாசகனுக்கு அடிப்படை விடயங்கள். இவற்றை அடிக்கடி மாற்றிக்கொள்வதாலும், தடம் புரள்வதாலும் ஒருவர் ஆன்ம முன்னேற்றம் தடைப்பட நேரும்.

- சக்தி ஒளி: சுடர்:3, விளக்கு:11

அன்னையின் அருள்வாக்கு:

“இன்றைய உலகம் பண்பில்லாத உலகமாகவும், பாசமில்லாத உலகமாகவும் இருக்கிறது”

சுடரில்.....

அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்...

பக்கம் - 1-6, 11

□□□

UPCOMING EVENTS

Melbourne – Pg 7, 8

Sydney _ Pg 9

Brisbane _ Pg 13

□□□

திருமதி அம்மா பதில்கள்

பக்கம் : 14

□□□

அருள்வாக்கும் அனுபவங்களும்...

பக்கம்: 10

□□□

Divine Miracles

Pg: 16

□□□

ஆன்மிக நாட்குறிப்பு

பக்கம் : 15

□□□

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

### நடைபெறாத ஒன்றை ஏன் கூறுகிறாள்?

முன்பின் கோயிலுக்கு வராத ஓர் அம்மையார் காரில் வந்து இறங்கினார். பெரிய இடம் என்று பேசப்பட்டு மேட்டுக்குடி வர்க்கத்தைச் சேர்ந்தவர் அவர். இத்தகையவர்கள் கோவிலுக்கு வரும்பொழுது, சாதாரண பக்தர்களை விட்டுவிட்டுக் குருக்கள்மார் இவர்களை ஓடிப்போய் வரவேற்பது நம் ஊர்களில் பழக்கம். போகின்ற இடங்களிலெல்லாம் முதலிடம் பெறுகின்ற இவர்கள் எங்கேனும் தமக்கு முதலிடம் கொடுக்கப்படாதபோது தங்கள் கோபத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். அத்தகைய வர்க்கத்தைச் சேர்ந்த அம்மையார் அவர்.

அந்த அம்மையார் இங்கே வந்தார். அவர் இங்கே இறங்கியவுடன் அவரை எதிர்கொண்டு அழைப்பவர் யாரும் இல்லை. அவரோடு கூட வந்தவர் அருள்வாக்கிற்காகப் பெயர் படிக்கும் தொண்டரிடம் வந்து, “இந்த அம்மையார் யார் தெரியுமா? அவர்தான் இன்னார் என்றும், அவர் அருள்வாக்குக் கேட்க வந்திருக்கிறார் என்றும் சொல்லிப் பார்த்தார். அந்தத் தொண்டரோ அதுபற்றிக் கண்டுகொள்ளவே இல்லை. “அவருடைய பெயர் வரும்பொழுது அவர் உள்ளே செல்லலாம். அதுவரையில் மகளிர் பகுதியில் அவர் அமர்ந்திருக்கலாம்” என்று கூறிவிட்டார்.

இந்த நிலையில் சாதாரண ஏழை மக்கள் அமர்ந்திருக்கும் அந்த இடத்தில் அமர்வதற்கு அந்த அம்மையார்க்கு மனம் இல்லை. தன் காரிலேயே சென்று அமர்ந்துகொண்டார். கடைசியில் அவரது பெயர் அழைக்கப்பெற்றதும் வேண்டா வெறுப்பாக உள்ளே நுழைந்தார். சில நிமிடங்கள் கழித்து மலர்ந்த முகத்துடன் வெளியே வந்தார். அழைத்து வந்தவரிடம் “அம்மன் பிட்டுப் பிட்டு வைக்கிறது; மகா ஆச்சரியம்” என்று கூறிக்கொண்டு காரில் ஏறிச் சென்று விட்டார்.

சில நாள் கழித்து, அம்மையாரை அழைத்துக்கொண்டு வந்தவர், கோயிலில் இருந்த ஒரு பெரியவரிடம் “என்ன சார்! என்ன என்னமோ சொல்கிறார்கள். அம்மா கூறினால் தவறவே தவறாது என்றெல்லாம் கூறுகிறார்கள். ஆனால், நான் அழைத்து வந்த கேஸ் பெயிலாகிவிட்டது” என்று உள்ளம் வருந்திக் கூறினார். அந்தப் பெரியவருக்குக்கூட ஒரு வியப்பு! அன்னை கூறியதும் தவறுமா? என்று ஐயம்!

அந்தப் பெரியவரும், அவருக்கு வேண்டிய தொண்டர் ஒருவரும் இதுபற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒருநாள் அன்னையிடம் சென்றனர். “தாயே! இவ்வாறு நீ கூறியது நடைபெறாமல் போய்விட்டதே! அது ஏன்? என்று அறிந்துகொள்ள வேண்டுகின்றோம்” என்றனர். அன்னையிடம் இதுகுறித்துக் கேட்கலாமா? வேண்டாமா என்று தயக்கம்கூட இருவருக்கும் இருந்தது என்பது உண்மைதான். அன்னை மிகப்பொறுமையுடன் இதற்கு விளக்கம் கூறினாள்.

### நானே நம்பிக்கையை குலைத்துவிடுகிறேன்

“மகனே! குறிப்பிட்ட சிலர் இங்கே வர வேண்டாம் என்று நினைக்கிறேன். அவர்கள் வினையை அவர்கள் அனுபவித்தே தீர வேண்டும் என எண்ணுகிறேன். அதற்கு வழி என்ன? அவர்களைத் தாயினிடம் வராமல் செய்துவிடுவது ஒன்றுதான் வழி. தாயிடம் வந்தால், தாயின் மண்ணை மிதித்தால் அதற்குரிய பயனை நான் தந்தே தீர வேண்டும்.!

(தொடர்ச்சி....3ஆம் பக்கம்)

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

இது நடைபெறாமல் இருக்க ஒரே வழி அவர்களை இங்கு வராமல் செய்வதே ஆகும். எவ்வாறு வராமல் செய்வது? என் பெயரில் உள்ள நம்பிக்கையைக் குலைத்து விடுவதன் மூலம் இதனைச் செய்கிறேன்.

இவ்வாறு வருபவர்கள் ஆன்மிக அடிப்படையில் வருவதில்லை மகனே! ஆன்மிக அடிப்படையில் வருபவன் என்னைத் தவிர வேறு எதையும் விரும்பியோ, வேண்டியோ வருவதில்லை. எனவே, வெருட்டி அனுப்பத் தேவையில்லை. பயன் கருதி, ஏதாவது ஓர் இலாபத்தைக் கருதி வருபவர்களுக்கு அந்த இலாபம் இல்லாமற் செய்துவிட்டால் அவர்கள் வருவதை உடனே நிறுத்தி விடுவார்கள். இதனாலேயே நடைபெறாததை நடைபெறும் என்று கூறி அவர்கள் நம்பிக்கையைக் குலைத்துவிடுகிறேன்'' என்று விளக்கம் கூறினாள்.

இம்மாதிரி நடைபெறுவது என்றோ ஒருநாள் ஒருவர்க்குத் தான்! ஏனெனில் வருபவர்கள் பிற முயற்சிகள் அனைத்தையும் செய்துவிட்டு அது முடியாத நிலையில் - வேறு வழியே இல்லை என்ற நிலையில்தானே – வருகிறார்கள்? அன்னையிடம் போகவில்லையானால் அந்த இழப்பை அவர்கள் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்? ஆகவே, அன்னை எதுசெய்தாலும் சரியே! அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன் என்ற மனநிலையுடன் வருபவர்கள் உண்மையான பயனை அடைகின்றனர். இம்மாதிரி விடயங்களில் கற்றவர்களைவிடக் கல்லாதவர்களே மிக நல்லவர்கள். மிக எளிய நிலையில் உள்ள அவர்கள் உறுதியான நம்பிக்கையுடன் வருகிறார்கள். ஆதலால், அன்னை அவர்களைக் கைவிடுவதே இல்லை.

### பகைவர்களாக இருந்த இருவரை நண்பர்களாக மாற்றினாள்

இரண்டு அன்பர்கள் தமக்குள் மனம் வேறுபட்டுப் பெரும் போர் நிகழ்த்தத்தொடங்கிவிட்டனர். இவர்கள் இருவருமே கோயிலுக்கு வராதவர்கள்தான். இவர்களின் பகையும் போராட்டமும் முற்றிவிட்டால், அந்த இருவர் மட்டுமின்றி அவர்களுடைய குடும்பங்களும் அல்லல்களுக்கு ஆளாகும் என்ற நிலைமை! இந்த நிலையில் பிற நண்பர்கள் இவர்களின் பகைமை தணிய வேண்டும் என்று உணர்ந்தனர். அந்த இருவருள் ஒருவரை நம் அன்னையிடம் அழைத்துவர முடிவு செய்தனர் அவர்களுடைய நண்பர்கள். நம்முடைய அறிவு நிலையில் நின்று அதிகத் தவறு செய்பவரும், நியாயத்துக்குக் கட்டுப்படாமல், தான் பிடித்த பிடிக்காக போராடுபவரும் இருவருள் யார் என்று பார்த்தால் இந்தப் போர்வழிதான்! இவரை எதிர்த்து நிற்பவரோ எவ்வித வம்புதும்புக்கும் போகாதவர். இன்னும் கூறப்போனால் போராடுவதை விட விட்டுக்கொடுத்தால் போராட்டத்தையாவது தவிர்க்கலாமே என்ற பரந்த மனம் உள்ளவர். நியாயம் தன் பக்கம் இருப்பினும் விட்டுக் கொடுக்கவும், அதனால் வரும் இழப்பை ஏற்றுக்கொள்ளவும் அவர் தயாராக இருந்தார். இந்த நிலையில் அக்கிரமமாகப் போராடுபவர் மனம் மாறுவது கஷ்டம் என்று தெரிந்த நண்பர் ஒருவர், அந்த வம்புக்காரரை அன்னையிடம் அழைத்துவந்தால் ஒருவேளை அவர் திருந்தலாம் என்ற முடிவில் அழைத்து வந்தார். அருள்வாக்கிற்கு அவரை அனுப்பினார்.

அன்னை நல்ல சூடு கொடுத்து அவர் மனத்தை மாற்றியிருப்பாள் என்று கனவு கொண்டிருந்தார் நண்பர். உள்ளே போனவர் வெளியே வரும்போதே வெற்றிப் புன்னகையுடன் வந்தார். நண்பர் அவரை விசாரித்தார். அவர் பெருமிதத்துடன் “தன் கட்சியில் மட்டுமே நியாயம் இருப்பதாகவும், தொடர்ந்து போராடவும், நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவும் அம்மா உத்தரவு கொடுத்துவிட்டாள். இனிமேல் அடிக்கடி அம்மாவிடம் வந்து மேற்கொண்டு என்ன செய்லாம் என்பதைத் தெரிந்துகொண்டு அதன்படியே நடக்கப் போகிறேன்'' என்று கூறினார். அவரை அழைத்துக்கொண்டு வந்த நண்பருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

### என் வழிகளை ஆராயாதே!

இந்த நண்பரால் அழைக்கப்பட்டு அன்னையிடம் வந்த அன்பர் அடிக்கடி கோயிலுக்கு வர ஆரம்பித்தார். அன்னையின் ஆணைப்படி எதிரிக்கு வக்கீல் நோட்டீஸ் விடவும் தயார் செய்துவிட்டார். இந்த நிலை கண்டு நண்பர் மனம் புழுங்கினார். அன்னையிடமே இதுபற்றிக் கேட்டுவிடுவது என்று முடிவு செய்தார். அன்னை தவறான வழிக்கு ஒருபோதும் துணை செய்ய மாட்டாள் என்ற நம்பிக்கையில் வந்தவர்க்கு வருத்தமாகிப் போய்விட்டது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

நேராக அன்னையிடமே துணிந்துசென்று ''தாயே! நான் அழைத்துக்கொண்டு வந்தவர் தவறான பாதையில் போகிறார். அவர் மனத்தை மாற்றி நல்ல வழி காட்டுவாய் என்று தானே உன்னிடம் அழைத்து வந்தேன். அவருக்கு நீயே துணை செய்யத் தொடங்கிவிட்டாயே! உன் பெயரைச் சொல்லிக்கொண்டு அவர், மேலும் தன் வழியே செல்லத் தொடங்கிவிட்டாரே! உன்னையன்றி வேறு துணை இல்லை என்று வந்த எனக்கு இந்தக் கதியா வர வேண்டும்?'' என்று அழுதார்.

அன்னை மிகவும் பொறுமையாக நண்பர் கூறுவன அனைத்தையும் கேட்ட பிறகு, ''மகனே! என்னிடம் பெருநம்பிக்கை வைத்துத்தானே அழைத்து வந்தாய்? இப்போது ஏன் உனக்குச் சந்தேகம்? நீ என்ன விரும்பினாய்? அவன் மனத்தை மாற்றி நல்வழிப்படுத்த வேண்டும் என்றுதானே விரும்பினாய்? அதனைச் செய்து தருகிறேன். ஆனால், நான் மேற்கொள்ளும் வழிகளை நீ ஆராயத் தொடங்காதே! நீ விரும்பும் முடிவையே செய்து தருகிறேன். ஆனால், அந்த முடிவைப் பெற நீ நினைக்கும் வழிதான் சரியானது என்று நீ நினைக்கிறாய். இப்போது உனக்குக் காரணத்தைக் கூறுகிறேன். கவனமாகக் கேட்டுக்கொள். ஆனால், அதை வெளியில் கூறாதே! நீ அழைத்து வந்த மகன் முன்பின் கோவிலுக்கு வராதவன். நீ வரச் சொன்னதால் வந்தவன். வரும்போது அவனுக்கு என்னிடம் கடுகளவு கூட நம்பிக்கை கிடையாது. அந்த நிலையில் அவனிடம் நியாயம் இல்லை என்று நானும் கூறியிருந்தால் மறுநாள் இந்தப் பக்கமே வரமாட்டான்.

இப்போது அவன் வழியில் நானும் சென்றதால் என்னிடம் அவன் நம்பிக்கை வளர்ந்திருக்கிறது. இப்போது அவனாகவே எத்தனை முறை கோவிலுக்கு வருகிறான் என்பதைக் கண்டாய் அல்லவா? அந்த நம்பிக்கையை இன்னும் நன்றாக வளர்த்து நான் யார் என்பதை அவன் புரிந்துகொள்ளும் வழி செய்துவிட்டு, நான் என்ன சொன்னாலும் தட்டாமல் உடனே செய்யும் நிலைக்கு அவனைக்கொண்டு வரப்போகிறேன்.

நாய் வாலை நிமிர்த்தமுடியாது என்றுதான் உலகம் கூறுகின்றது. மகனே! நீ கூட அப்படித்தான் நினைத்துவிட்டாய். ஆனால், நான் அந்த நிமிர்த்தமுடியாத வாலைக்கூட நிமிர்த்திக்காட்டுகிறேன் பார்! அவன் என் சொற்படி நடக்க முடிவு செய்து கொண்ட அன்றைக்கு உன் கருத்தை நிறைவேற்றி வைக்கிறேன் மகனே! அஞ்சாதே! ஆனால், அதற்காக நான் மேற்கொள்ளும் வழிகளை ஆராயாதே! அது உன் அறிவுக்கு அப்பாற்பட்டது. கவலையில்லாமல் இரு! சென்று வா!'' என்று அந்த நண்பருக்கு அறிவுரை தந்து அனுப்பிவிட்டாள்.

### நடந்தது என்ன?

மேற்கண்டவாறு அன்னை அந்த நண்பருக்குச் சொல்லி அனுப்பிவிட்டாள் அல்லவா? அந்த நண்பர் நாளுக்கு நாள் அன்னையின் ஆணையைப் பெற்றுவிட்டதாகக் கூறிக்கொண்டு, தான் முனைந்த காரியத்தில் முன்னேறிக்கொண்டிருந்தார்.

ஆனால், என்ன வியப்பு! அவர் கோவிலுக்கு வந்த நான்காவது மாதத்தில் திடீரென்று அவரே தன் விரோதியிடம் சென்று மன்னிப்பு வேண்டினார். தன் பிழைகளையெல்லாம் எடுத்து அடுக்கிக் கூறினார். தம்மையும், தாம் இதுவரை செய்ததையும் எப்படியும் மன்னிக்க வேண்டும் என்று மன்றாடினார். இருவரும் பழைய நிலையை அடைந்துவிட்டனர். அதைவிடச் சிறப்பு என்னவென்றால், எவர்மேல் வழக்கு தொடர்ந்து ஒரு கை பார்க்கிறேன் என்று கங்கனம் கட்டிக்கொண்டு இருந்தாரோ, அவரையும் அழைத்துக்கொண்டு இவரே கோயிலுக்கு வந்துவிட்டார். இருவரும் அன்னையிடம் ஒன்றாகச் சேர்ந்து அருள்வாக்கு கேட்கப் போன காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. முதலில் இருவருள் ஒருவரை அழைத்து வந்த நண்பர் அன்னையின் கருணையையும், அவளுடைய பேராற்றலையும் எண்ணியெண்ணி வியந்து கண்ணீர் பெருக்கினார். இந்த நிகழ்ச்சி ஒரு மாபெரும் உண்மையை வெளிப்படுத்துகிறது என்பது மட்டும் மறக்க முடியாத ஒன்றாகும்.

எத்தகைய மாபெரும் காரியத்தையும் அன்னை சாதித்து விடுகிறாள். மனிதருடைய மனத்தை அடியோடு மாற்றுகின்ற சித்துத் தான் அவளுடைய திருவிளையாடல்களில் மிகச் சிறப்பானதாகும். ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்றையும் விளையாட்டாகவே செய்யும் இந்த அன்னை எந்த வழியை மேற்கொண்டு எவ்வாறு முடிக்கிறாள் என்பதை மட்டும் நாம் கூற முடியாது.

(தொடர்ச்சி…5ஆம் பக்கம்)

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

### ஆணிவேரும் சல்லிவேரும்

ஒருமுறை அன்னையே தன்னைப் பற்றிச் சொன்னாள். "மகனே! ஆணிவேரும் சல்லிவேரும் இல்லாமலேயே மரம் வளர்ப்பவள் நான்!" என்றாள். ஆம்!"விச்சது இன்றியே விளைவு செய்குவாய்!" என்கிறார் மணிவாசகர். பரம்பொருளான அன்னையும் தன் இச்சாசக்தி மூலமாகவே எதனையும் செய்ய வல்லவள்!".

### அனைவருக்கும் ஒரே நியதி என்பதில்லை

உலகம் முழுவதையும் தன் குடும்பமாகவே வைத்து நடத்தும் அன்னை, தன்னை நாடி வருகின்ற குழந்தைகள் அனைவரையும் ஒரே நியதிக்கு உட்படுத்துவதில்லை. அவரவர் தகுதி, தன்மை, மனநிலை, உறுதிப்பாடு ஆகியவற்றிற்கேற்ப அவரவர்க்குரிய நெறிகளை வகுக்கின்றாள். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைக் காணலாம். கோவிலுக்கு வழக்கமாக வரும் நண்பர் ஒருவர், "ஐயா! என்னுடைய பங்காளி ஒருவர் இரண்டு நாள் முன்பு காலமாகிவிட்டார். இன்று நான் கோவிலுக்கு வரலாமா?" என்று கேட்டார். ஆகம நியதியான கோயிலானால் இதுபோன்ற விடயங்களுக்குச் சட்டதிட்டங்கள் உண்டு. ஆனால், அன்னையின் கோயிலில் நெறிமுறைகள் எப்படி என்று தெரியாத ஒரு தொண்டர். அன்னையிடம் சென்று இப்பிரச்சனையைக் கூறி என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். அன்னை "மகனே! ஒரு வாரத்திற்கு அவன் என் கோயிலுக்கு வரக்கூடாது என்று கூறிவிடு!" என்று தெரிவித்து விட்டாள்.

### ஒன்று நான்கைத் தின்னும்போது தீட்டு எங்கே?

28.01.1980 அன்று தொண்டரின் சிறிய தந்தையார் காலமாகிவிட்டார். அவர் திருச்சி சென்று சிறிய தந்தைக்குரிய கடமைகளை முடித்துவிட்டு, மறுநாள் 29.01.1980 செவ்வாய்க்கிழமை அன்று அத்தொண்டர் மருவத்தூர் வந்து சேர்ந்துவிட்டார். காலைக்கடன்களை முடித்த பிறகு, அன்னையின் கோயிலுக்குச் செல்லாமல் நெடுஞ்சாலையில் மரத்தடியில் நின்று கொண்டிருந்தார். அந்நாட்களில் அன்னை செவ்வாய்க்கிழமைகளில் காலை 7 முதல் 9 மணி வரையிலும், மாலை 4 முதல் 7 மணி வரையிலும் அருள்வாக்குச் சொல்லிக்கொண்டு இருந்தாள். காலையில் பெயர் படிக்கின்ற அன்பரை உள்ளே அழைத்து "மகனே! நெடுஞ்சாலையில் ஒரு தொண்டன் நிற்கிறான். அவனை உள்ளே அழைத்து வா!" என்று கட்டளையிட்டாள். என்னுடைய நிலைமை இது, ஆகவே நான் கோயிலுக்குள் வர முடியாது" என்று கூறிவிட்டார். பெயர் படிப்பவர் அன்னையிடம் சென்று நடந்தவற்றைக் கூறியவுடன் அன்னை, "தெரிந்துதான் அவனை அழைத்தேன், உடனே அவனை வரச்சொல்" என்று கடுமையாகக் கட்டளையிடவும் வேறு வழியில்லாமல் அந்தத் தொண்டர் உள்ளே செல்ல நேரிட்டது.

அன்னையை விழுந்து வணங்கிவிட்டு, அவளுடைய திருவடிகளில் அமர்ந்த அவரைப் பார்த்து, "மகனே! இந்த உடம்பு எதனால் ஆகியது?" என்று கேட்டாள். இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்காததால், அத்தொண்டர் பேசாமல் இருந்துவிட்டார். உடனே அன்னை, "என்னடா மகனே! கேட்ட கேள்விக்குப் பதில் பதில் சொல்லாமல் சும்மா இருக்கிறாயே! மானிட உடல் எதனால் ஆகியது?" என மறுபடியும் கேட்டாள். பயந்துபோன அத்தொண்டர் மிகவும் தயக்கத்துடன் "இந்த உடம்பு பஞ்சபூதத்தினால் ஆகியது" என்று விடை கூறினார். உடனே அன்னை "இப்பொழுது தெரிகிறது அல்லவா? ஐந்தில் ஒன்று மீது நான்கையும் தின்கிறது. இதில் உனக்கென்ன தீட்டு? உடனே சென்று சுயம்பிற்குச் சூட தீப ஆராதனை செய்துவிட்டு உனக்கு இட்ட பணியைச் செய் போ!" என்று ஆணையிட்டாள். இதனால் இதுபோன்ற காரியங்களில் தீட்டுக் காக்க வேண்டிய தேவையே இல்லை என்பது பொருள் அன்று! இது யாருக்காகச் சொல்லப்பட்டதோ, அவரைப் பொறுத்தமட்டில், இந்தச் சட்டம் செல்லுபடியாகும் - என்பதே பொருள். இதுபோன்ற மற்றொரு நிகழ்ச்சியையும் அறிவது பொருத்தமாகும்.

### புறத்தூய்மை இன்றேனும் ஏற்கிறாள்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய கலசபூசை நடைபெறுகின்ற நாள். அப்பொழுதெல்லாம் இரவு 12 மணிக்கு மேல் விழா தொடங்கும். கோவிலில் பணி புரிகின்ற அன்பர் ஒருவர் முன்னேரத்திலிருந்தே பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டு இருந்தமையின் எல்லோரும் குளித்து ஈர உடையில் நிற்கையில் இந்த அன்பர் மட்டும் குளிக்காமல் இருந்துவிட்டார்.

(தொடர்ச்சி…6ஆம் பக்கம்)

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டு இருந்தமையினால் குளிக்க வேண்டும் என்ற எண்ணமே அவருக்கு ஏற்படவில்லை. நேரம் நெருங்கிவிட்டது. அன்னை வரப்போகின்ற நேரத்தை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

இந்த இக்கட்டான வேளையில் அன்பரின் மனைவியார் அவரை அழைத்து, "இப்படி நீங்கள் அக்கிரமம் செய்யலாமா? குழந்தைகள் முதல் தொண்டு கிழவர்கள் வரை அனைவரும் குளித்துவிட்டு அன்னையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்தில் குளிக்காமல் கூட இருக்கிறீர்களே! அம்மா வந்து ஏதாவது கட்டளை இடுவதற்குப் பக்கத்தில் அழைத்தால் எப்படி அம்மாவிடம் போய் நிற்பீர்கள்?" என்று கேட்டுவிட்டார். அன்பருக்கு உதறல் கண்டுவிட்டது. குளிப்பது பற்றி நினைவே இல்லாமல் இருந்தவருக்கு, இது எவ்வளவு பெரிய தவறு என்று விளங்கிவிட்டது.
"உடனடியாக குளிக்க செல்ல வேண்டும்" என்று திரும்பிய தொண்டருக்கு மற்றோர் ஆச்சரியம் காத்து நின்றது! ஆம்! அன்னையே அங்கு தோன்றிவிட்டாள். இதை எதிர்பாராத அன்பர், அன்னையை விட்டு எட்டச் சென்றுவிட்டார். ஆனால், என்ன அதிசயம்? அன்னை கைகாட்டி இவரைப் பக்கத்தே வருமாறு அழைத்தாள். வேறு வழியில்லாமல் அன்பர் பக்கத்தில் போய் நின்றார். அன்னை இவர் பக்கம் திரும்பி "மகனே! உள்ளே சென்று சுயம்புக்கு கற்பூர ஆராதனை செய்துவிட்டு அதே தட்டை வெளியே கொண்டு வந்து ஒன்பது கலசங்களுக்கும் தீப ஆராதனை காட்டி அந்த அக்கினியைக் கொண்டே யாகத்தீயை மூட்டுக" என்று ஆணையிட்டாள். பாவம்! அன்பர் ஆடிப்போய்விட்டார்.

தான் செய்துவிட்ட தவற்றை வெளியே கூறவும் முடியவில்லை. குளிக்காமல் அன்னையிட்ட ஆணையை நிறைவேற்றவும் முடியாது. எனவே, "சரி அம்மா" என்று கூறிவிட்டு இரண்டடி நகர்ந்து வந்து அங்கு நின்று கொண்டிருந்த மற்றோர் அன்பரைப் பார்த்து அன்னை கூறியவற்றைச் செய்துவிடுமாறு வேண்டிக்கொண்டார். அவர் கூறி முடிக்கு முன், "மகனே! இங்கே நான் யாருக்கு ஆணையிடுகின்றேனோ, அவன்தான் அக்காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமே தவிர, அவன் மற்றவரிடம் அதனைச் செய்யுமாறு கூறுதல் தவறாகும். சொன்ன பணியை உடனே செய்து முடி!" என்று கூறிவிட்டாள். வேறு வழியின்மையால் அன்பர் அதனைச் செய்து முடித்துவிட்டார்.

கலச பூசை முடிந்து அன்பர் வீட்டுக்குச் செல்கையில் அவருடைய மனைவியார் மேலும் அவரிடம் கோபித்துக்கொண்டார். ஆனால், இந்தப் பிரச்சனையைப் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த பெரியவர் ஒருவர், அன்பரின் மனைவியைப் பார்த்து, "அம்மா! நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள்! அன்பர் வேண்டுமென்று குளிக்காமல் இருக்கவில்லை. அதுபற்றிய நினைவே அவருக்கு இல்லை. ஆனால் நடந்தது எண்ணி நீங்கள் அவருக்கு நினைவூட்டியவுடன் அன்பர் தாம் ஏதோ பெரும் தவறு செய்துவிட்டதாக வருந்தத் தொடங்கிவிட்டார். யாவற்றையும் அறிபவளாகிய தாய் அன்பர் குளிப்பது பற்றிய நினைவே இல்லாமல் இருந்துவிட்டதை ஏற்றுக்கொண்டுவிட்டாள். அதனால்தான் அவரையே ஏவி தீப ஆராதனை செய்க என்று கட்டளையிட்டுவிட்டாள். அவரைப் பொறுத்தவரை குளிப்பதையும், குளிக்காமல் இருப்பதையும் சிந்திக்கவில்லை என்பதே உண்மை. பரம கருணையுடைய இத்தாய் ஒருவருடைய மனம் எவ்வாறு இருக்கின்றது என்று பார்க்கின்றாளே தவிரப் புறத்தூய்மை பற்றிக் கவலைப்படவில்லை. எனவே தான் அன்பரின் செய்கையைத் தான் ஏற்றுக் கொண்டதை அறிவிக்கும் முறையில் அவருக்கே அக்கட்டளையிட்டாள். அவரைப் பொறுத்தவரை, குளித்துவிட்டுத்தான் செய்ய வேண்டும் என்ற சட்டம் செல்லாது" என்று கூறி முடித்தார். மேலும் தொடர்ந்து பெரியவர் **"அம்மா! இவ்வாறு கூறுவது அவர் ஒருவருக்குத்தான் பொருந்துமே தவிர மற்றவர்களுக்குப் பொருந்தாது"** என்றும் கூறினார்.

### வளர்ச்சியும் மாறுதல்களும்

பிற கோயில்களுக்கும் ஆதிபராசக்தி ஆலயத்திற்கும் உள்ள வேறுபாட்டை இம்மாதிரி நிகழ்ச்சிகளின் வாயிலாக நன்குணரலாம். பிற கோவில்களில் தெய்வம் நம்முடன் பேசுவதில்லை. எனவே அங்கு வரும் அன்பர்களின் தராதரத்தையும், மன நிலையையும் அறிந்துகொள்ள வாய்ப்போ வசதியோ கிடையாது.

(தொடர்ச்சி...11ஆம் பக்கம்)

# Melbourne - Mandrams – Upcoming Events – November 2011

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்
(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

மன்ற தொலைபேசி: 0434648416
(மன்றம் வழிபாட்டிற்காகத் திறந்திருக்கும் காலம் மட்டும்)

## November - ஐப்பசி - கார்த்திகை

Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0411881024, 0433440194, 0417113082

| | | | | |
|---|---|---|---|---|
| 01.11.2011 | Tuesday | ஐப்பசி | 15 | **Joint Prayer – "கூட்டு வழிபாடு"**<br>7.30p.m. – 9.00p.m. |
| 02.11.2011 | Wednesday | ஐப்பசி | 16 | 7.00p.m. – 8.00p.m. |
| 03.11.2011 | Thursday | ஐப்பசி | 17 | 7.00p.m. – 8.00p.m. |
| 04.11.2011 | Friday | ஐப்பசி | 18 | 7.00p.m. – 8.00p.m. |
| 05.11.2011 | Saturday | ஐப்பசி | 19 | 7.00p.m. – 8.00p.m. |
| 06.11.2011 | Sunday | ஐப்பசி | 20 | **Joint Prayer – "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 6.00p.m. – 8.30p.m.** |
| 07.11.2011 | Monday | ஐப்பசி | 21 | 7.00p.m. – 8.00p.m. |
| 08.11.2011 | Tuesday | ஐப்பசி | 22 | **Joint Prayer – "கூட்டு வழிபாடு"**<br>7.30p.m. – 9.00p.m. |
| 09.11.2011 | Wednesday | ஐப்பசி | 23 | 7.00p.m. – 8.00p.m. |
| 10.11.2011 | Thursday | ஐப்பசி | 24 | Joint Prayer–<br>**பௌர்ணமி** –<br>*"1008 போற்றி மலர்கள்" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு*<br>7.30p.m. – 9.00p.m. |
| 11.11.2011 | Friday | ஐப்பசி | 25 | 7.00p.m. – 8.00p.m. |
| 12.11.2011 | Saturday | ஐப்பசி | 26 | 7.00p.m. – 8.00p.m. |
| 13.11.2011 | Sunday | ஐப்பசி | 27 | **Joint Prayer – "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 6.00p.m. – 8.30p.m.** |
| 14.11.2011 | Monday | ஐப்பசி | 28 | 7.00p.m. – 8.00p.m. |
| 15.11.2011 | Tuesday | ஐப்பசி | 29 | **Joint Prayer – "கூட்டு வழிபாடு"**<br>7.30p.m. – 9.00p.m. |
| 16.11.2011 | Wednesday | ஐப்பசி | 30 | 7.00p.m. – 8.00p.m. |
| 17.11.2011 | Thursday | கார்த்திகை | 01 | 7.00p.m. – 8.00p.m. |
| 18.11.2011 | Friday | கார்த்திகை | 02 | 7.00p.m. – 8.00p.m. |
| 19.11.2011 | Saturday | கார்த்திகை | 03 | 7.00p.m. – 8.00p.m. |
| 20.11.2011 | Sunday | கார்த்திகை | 04 | **Joint Prayer – "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 6.00p.m. – 8.30p.m.** |
| 21.11.2011 | Monday | கார்த்திகை | 05 | 7.00p.m. – 8.00p.m. |
| 22.11.2011 | Tuesday | கார்த்திகை | 06 | **Joint Prayer – "கூட்டு வழிபாடு"**<br>7.30p.m. – 9.00p.m. |
| 23.11.2011 | Wednesday | கார்த்திகை | 07 | 7.00p.m. – 8.00p.m. |
| 24.11.2011 | Thursday | கார்த்திகை | 08 | **அமாவாசை** ~<br>**"1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>7.30p.m. – 9.00p.m. |
| 25.11.2011 | Friday | கார்த்திகை | 09 | 7.00p.m. – 8.00p.m. |
| 26.11.2011 | Saturday | கார்த்திகை | 10 | 7.00p.m. – 8.00p.m. |
| 27.11.2011 | Sunday | கார்த்திகை | 11 | **Joint Prayer – "1008 போற்றித்திருவுரு" மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு 6.00p.m. – 8.30p.m.** |
| 28.11.2011 | Monday | கார்த்திகை | 12 | 7.00p.m. – 8.00p.m. |
| 29.11.2011 | Tuesday | கார்த்திகை | 13 | **Joint Prayer – "கூட்டு வழிபாடு"**<br>7.30p.m. – 9.00p.m. |
| 30.11.2011 | Wednesday | கார்த்திகை | 14 | 7.00p.m. – 8.00p.m. |

# Melbourne - Mandrams – Upcoming Events – November 2011

## Vermont South

### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133
(Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 04.11.2011 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 10.11.2011 | THURSDAY – வியாழன் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>"பௌர்ணமி விளக்குப் பூஜை" |
| 11.11.2011 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.11.2011 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.11.2011 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Lalor

**Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.**

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 06.11.2011 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.11.2011 | SUNDAY - ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## Mulgrave

### Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref.: 80 F 5)

**Joint Prayers: Every Sunday**

| | | | |
|---|---|---|---|
| 06.11.2011 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 13.11.2011 | Sunday | 09.00a.m.<br>06.10p.m. | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>"Thiru Vilakku Pooja" – "திருவிளக்குப் பூஜை" |
| 20.11.2011 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |
| 27.11.2011 | Sunday | 10.00a.m. – 12.30p.m. | கூட்டு வழிபாடு – Joint Prayer |

## *From where to Begin:*

**"You should help those people in the streets who have been left unnoticed by today's political parties, Government and Society and who starve for food and dress! Your service should start from here."**

- Melmaruvathur Amma's Oracle

# Sydney - Mandrams - Upcoming Events – November 2011

| Homebush | Westmead | Lidcombe |
|---|---|---|
| Melmaruvathur<br>Athiparasakthi<br>Sithar Peeta<br>Sydney Centre<br><br>Contact: 02-97643872<br>0416217317 | Melmaruvathur Swayambu<br>Arulmihu Annai<br>Athiparasakthi Sitherpeedam<br>NSW (Australia)<br>Contact: 02-96420519<br>0425319622 | Athiparasakthi<br>Spiritual & Charitable<br>Movment of<br>Australasia<br>Contact: 02-97022446 |
| **Every Friday**<br>**7.30p.m. – 9.00p.m.** | **Every Friday**<br>**7.30p.m. – 9.30p.m.** | **Every First Friday of the month**<br>**7.30p.m. – 9.30p.m.** |
| Homebush High School<br>(Gymnastic Hall)<br>Bridge Road, Homebush 2140 | Westmead Public Primary School<br>Moree Street - Westmead | 23, Cambridge Street,<br>Lidcombe 2141<br>NSW |
| **Joint Prayers:**<br>**04.11.2011** | **Joint Prayers:**<br>**04.11.2011** | **Joint Prayers:** |
| **10.11.2011**<br>**Pournami Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.** | **10.11.2011**<br>**Pournami Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.** | **10.11.2011**<br>**Pournami Vilakku Pooja**<br>**7.30p.m. – 9.30p.m.** |
| **11.11.2011**<br>**18.11.2011**<br>**25.11.2011** | **11.11.2011**<br>**18.11.2011**<br>**25.11.2011** | |

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

சக்தி ஒளி

## ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்

ஆண்டுச்சந்தா ரூபா ₹ 120.00 (இந்தியா)
ஆயுள் சந்தா ரூபா ₹ 1600.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா இந்திய ரூபா ₹ 1500.00 (இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும். உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,‘Sakthi Oli’Office, Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,Tamil Nadu, South India.

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## அவன் விவரம் தெரிந்தவன்

சென்னையில் மழை வேண்டி மகளிர் ஆன்மிக மாநாடு (1983ஆம் ஆண்டு மே மாதம்) நடத்திய சமயம் அது. மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. மாநாட்டு வேள்வியின் முக்கியத்துவம் பற்றிச் சென்னை நகரத்தின் மூலை முடுக்குகளிளெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்த வேள்வியைத் தரிசிப்பது வாழ்நாளில் ஒரு பெரிய பாக்கியம் என்று மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

அன்பர் ஒருவர், நம் ஆலயத் தொண்டர் ஒருவரிடம் வந்தார். சித்தர் பீடத்தின் முக்கியப் பொறுப்பிலிருந்த தொண்டர் அவர். அவரிடம் அந்த அன்பர் ''ஐயா! சென்னை ஆன்மிக மாநாட்டில் அம்பாளை வேண்டி யாகம் நடத்த இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அம்பாளுக்குப் பட்டுப்புடவை ஒன்றை ஆகுதியாக அளித்து அம்பாளுக்குச் சாத்த வேண்டும் என்பது என் ஆசை. நீங்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று கேட்டார்.

''அருள்வாக்கில் அம்மா சொல்கிற முறைப்படிதான் நாங்கள் இதுவரை வேள்வி செய்து வருகிறோம். வேள்வியில் பட்டுப்புடவை ஆகுதி கொடுப்பது இதுவரை எங்களுக்கு வழக்கமில்லை. அம்மாவிடம் உத்தரவு பெற்றுத்தான் செய்ய வேண்டும். நாங்களாகச் செய்ய எங்களுக்கு உத்தரவில்லை'' என்றார் அந்தத் தொண்டர்.

''அப்படியானால் அம்பாளின் அருள்வாக்கில் உத்தரவு கேட்டு எனக்குத் தகவல் சொல்லுங்கள்'' என்றார் அந்த அன்பர்.
தொண்டர், அந்த அன்பரின் வேண்டுகோளை அருள்வாக்கின்போது அன்னையிடம் முறையிட்டார்.
அதுகேட்டு அன்னை சொல்லிய பதில் ''அவன் விவரம் தெரிந்தவனடா'' மகனே!''

## கொல்லன் உலைக்களம் பார்த்திருக்கிறாயா?

சென்னையிலிருந்து மேல்மருவத்தூர் அன்னையிடம் அடிக்கடி வருகிற இரண்டு நண்பர்கள். அன்னையிடம் அருள்வாக்கு கேட்கச் சென்றார்கள். அவருள் ஒருவர், சித்தாடல் மூலம் பெரிய கடவுள் அவதாரம் என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு ''தாயே! அவர் போல உன்னால் சித்தாடல் செய்ய முடியுமா?'' என்று கேட்டு விட்டார். அறியாத இளமை, தெரிந்து கொள்ளும் ஆவல்! அதனால் அப்படிக் கேட்டுவிட்டார்.

அது என்ன மகனே சித்து? நான் ஒன்று காட்டுகிறேன் பார்! கொல்லன் உலைக்களம் பார்த்திருக்கிறாயா? இப்போது என் உள்ளங்கையைப் பார்!'' என்று தன் உள்ளங்கையைக் காட்டினாள். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

அந்த உள்ளங்கையில் சிறிய வெள்ளி கம்பிகள் பாய்ந்தன. உடன் கம்பிகள் வளைந்து வளையமாயிற்று. ஒரு நீலக்கல் வந்து அமர்ந்தது. அடுத்து ஒரு நீலக்கல் மோதிரம் அன்னையின் உள்ளங்கையில் உருவாகிவிட்டது. இவ்வளவும் ஒரு சில வினாடிகளுக்குள்ளேயே நடந்துவிட்டது. நண்பர்கள் இருவரும் அதிசயப்பட்டனர். இம்மோதிரத்தை எனக்குக் கொடுக்கக்கூடாதா? என்று மனதிற்குள் எண்ணினார் ஒருவர். அதை உணர்ந்த அன்னை ''இது உங்களுக்கு இல்லை'' என்றாள்.

''ஏன் தாயே! தங்களால் இந்த மோதிரத்தை மறைத்துவிடவும் முடியுமல்லவா? மறைப்பதுதானே!'' என்றார் ஒருவர்.
''இதை நான் மறைப்பதற்காகப் படைக்கவில்லை மகனே! ஒரு பக்தனுக்காகப் படைத்தேன். இதை அவனிடம் கொடுக்கப் போகிறேன்'' என்றாள் அன்னை.
ஆத்துரைச் சேர்ந்த பக்தர் ஒருவருக்கு அளித்து விட்டாள் அன்னை.
பார்வைக்கு அது நீலக்கல் மோதிரம். ஆனால், அதன் ஒளிக்கற்றையில் பல நிறக்கதிர்களும் தோன்றும். அப்படியோர் அதிசயம்! அதுமட்டுமா? உற்றுப்பார்த்தால் சுயம்பு, அன்னை, அடிகளார் என்ற மூன்று உருவங்களும் தோன்றும். அப்படிப்பட்ட நீலக்கல் மோதிரம் அது!

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்....

நம் மனநிலையைப் பரம்பொருள் அறிவது உறுதிதான். காரணம், ஒவ்வொருவர் மனத்துள்ளும் அப்பரம்பொருள் நீக்கமற நிறைந்திருத்தலின் நம் எண்ண ஓட்டங்களை அது அறிந்து கொண்டுதான் இருக்கிறது. இருப்பினும் அது அறிந்துள்ளது என்பதை நாம் அறிய முடிவதில்லை. **கடவுள் பக்தியுடைய ஒரு மனிதன் மன வளர்ச்சிக்கு ஏற்ப அவனுடைய நடை, உடை, பாவனை, நம்பிக்கைகள், செயல்முறைகள் என்பவையும் மாறிக்கொண்டிருக்கவேண்டும் அல்லவா? ஆனால், வாழ்க்கையில் அவ்வாறு மாறக் காண்கிறோமா? சிற்சிலவற்றில் மாறுதல்களைக் காண்கிறோம். ஆனால், கடவுள் நம்பிக்கையில், அதுபற்றிச் செய்யப்பெறும் கிரியைகளில் இம்மாற்றம் ஏற்படுகிறதா? குழந்தைப் பருவத்தில் நாம் கொண்ட நம்பிக்கைகள், செய்த கிரியைகள் நம் வளர்ச்சிக்கு ஏற்ப மாறுகின்றனவா? இல்லை ஏன்? பழைய கிரியைகளை விட்டுவிட்டால் என்ன தீங்கு நேருமோ என்ற அச்சம் தான் இதற்குக் காரணம். ஆனால், மருவத்தூரில் ஆதிபராசக்தி நம்முடன் உரையாடும் நிலைக்கு இறங்கி வருகிறாள். ஆதலின், நம் செயல்களை அவள் ஏற்கிறாளா அன்றி ஒதுக்குகிறாளா என்பதை நாம் நன்கு அறிய முடிகிறது.**

### பிற கோயில்களும் மருவத்தூர் கோயிலும்

ஒரு வகுப்பிலுள்ள நாற்பது பிள்ளைகளில் ஒரு சிலர் அதி தீவிர அறிவாளிகளாகவும், பெரும்பான்மையோர் இடைப்பட்ட சராசரி அறிவாளிகளாகவும், மிகச் சிலர் மந்த மதியினராகவும் இருத்தல் கண்கூடு. ஆனால், பாடம் என்பது இவர்கள் மூவகையினர்க்கும் ஒன்றாகவே நடைபெறுகிறது. தனித்தனிக் கவனிப்பு இன்மையின், தீவிரவாதிகளுக்கு இப்பாடம் கவனத்தை ஈர்க்காத ஒன்றாகவும், சராசரிவாதிகளுக்கு ஓரளவுப் பொருத்தம் உடையதாகவும், மந்த மதியினருக்குப் புரியாததாகவும் ஆகிவிடுகிறது. இந்த மூன்று வகையினரும் அதே வகுப்பில் அமர்ந்து ஓராண்டைக் கழித்துத் தான் தீரல் வேண்டும்.

ஆனால், ஆதிபராசக்தி ஆலயத்தில் வருகிற ஒவ்வோர் அன்பருக்கும் தனித்தனியே விதிகள். தனித்தனியே பாடங்கள், தனித்தனியே அனுபவங்கள்! மிகப்பலர் உலகியல் பலன் கருதியே வருகின்றனர். அவர்கள வேண்டுவதை அன்னை மனமுவந்து அளிக்கிறாள். தாம் விரும்பி வந்த பயனை அடைந்தவுடன் அன்னையை மறந்து செல்கின்றவர்களும் உண்டு. உலகியல் பயனை நாடி வந்தாலும் அது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அன்னையை விடாது பற்றிக்கொண்டு இருப்பவர்களும் உண்டு. உலகியல் நலம், குடும்ப நலம் என்று எதையும் விரும்பாமல் அவள் அருள் ஒன்றையே நாடி வருகின்ற சிலரும் உண்டு. பள்ளியில் உள்ள அதிதீவிர அறிவாளிகளைப் போல் இவர்களிலும் சிலர் உண்டு. வீடுபேறு – பிறப்பிலிருந்து விடுபடுதல் என்ற உயர்ந்த பலன்களைக் கூடக் கருதாமல் அன்னையிடம் தங்களை அடைக்கலமாகத் தந்துவிட்டு ''அம்மா! இதோ நான் உன் அடைக்கலம், என்னை எவ்வாறு வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்! இன்னும் பிறப்புத் தருவதானாலும் சரியே! ஆனால் எந்த நிலையிலும் உன் திருவடிகளை மறவாத மனத்துடன் என்னை வைத்துக்கொள்ள அருள்புரிக'' என வேண்டுகின்றவர்களும் உண்டு.

இந் மூன்று வகையினரைப் பிற கோயில்களிலும் காணலாம். ஆனால், அவர்களை இனம்பிரித்துக் காணுதல் இயலாத காரியம். மருவத்தூரில் அவரவர்களுக்கு அன்னை விதிக்கும் சட்ட திட்டங்களில் இருந்து அவரவர் மனநிலையை ஒருவாறு அறிந்துகொள்ள முடிகிறது.

## இரு முடியும் விரதமும்

**"ஐந்து நாள் விரதம் இரு! உண்மையாக இரு! கட்டுப்பாட்டுடன் இரு! அவ்வாறு இருந்து இருமுடி ஏந்தி வந்து செலுத்து"**

**"இருமுடி செலுத்துவது உன்னுடைய அழுக்குகளை நீக்கிக்கொள்ளவே! உன்னுடைய உள்ளத்திலுள்ள அழுக்கு. உன் குடும்பத்தில் உள்ள அழுக்கு. இவ்விரண்டு அழுக்குகளை நீக்கிக்கொள்ளவே அந்த இருமுடி! ஒழுக்கம், கட்டுப்பாடு இன்றி நீ செலுத்தும் இருமுடியால் பயன் இல்லை"**

- **அன்னையின் அருள்வாக்கு**

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

**ஓம் சக்தியே!**

ஆதிபராசக்தி சித்தர் பீடம்

மேல்மருவத்தூர்



**ஆதிபராசக்தியே!**

**2011**

**ஸ்ரீகர வருடம்**

## ஆலய சிறப்பு விழாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி | 24 | 10.11.2011 | வியாழன் | பௌர்ணமி |
| கார்த்திகை | 8 | 24.11.2011 | வியாழன | அமாவாசை - வேள்வி |
| கார்த்திகை | 9 | 25.11.2011 | வெள்ளி | அமாவாசை |
| கார்த்திகை | 22 | 08.12.2011 | வியாழன் | கார்த்திகை தீபம் |
| கார்த்திகை | 24 | 10.12.2011 | சனி | பௌர்ணமி |
| மார்கழி | 8 | 24.12.2011 | சனி | அமாவாசை - வேள்வி |
| மார்கழி | 9 | 25.12.2011 | ஞாயிறு | கிறிஸ்மஸ் |

## அன்னையின் அருள்வாக்கிலிருந்து...

“ஒரு குடும்பத்தில் ஒருவர் சம்பாதித்து, மற்றவர் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிட்டு வந்தால் என்ன நேரும்? வருமானத்தில் துண்டு விழும். கடன் பெருகிவிட்டதே என்று கஷ்டப்பட வேண்டிவரும். ஒருவர் சம்பாதித்துப் பலர் சாப்பிடுவதை விடக் குடும்பத்தில் உள்ள அனைவரும் சம்பாதித்தால் குடும்பத்தில் கஷ்டம் வராது. அதுபோலக் குடும்பத்தில் ஒருவர் மட்டும் ஆன்மிகத்தில் ஈடுபட்டால் போதாது. அனைவரும் ஈடுபட வேண்டும். குடும்பத்தில் உள்ள பத்து பேரும் ஆன்மிகத்தில் ஈடுபடும்போது, அந்தப் பத்துப்பேரின் உழைப்பிற்கான பலன் கிடைக்கும்.”

## நினைவில் நிறுத்திப் பற்றிக்கொள்ள...

28.11.1966 – புயல் காற்றில் வேப்பமரம் வீழ்ந்தது.
பிறகு அதன் அடியிலிருந்த புற்று கரைந்தது.
அதன் கீழ் சுயம்பு வெளிப்பட்டது.

25.11.1977 – கார்த்திகைத் திங்கள் பௌர்ணமியன்று
அன்னையின் திருவுருவச் சிலை
கருவறையில் நிறுவப்பட்டது.

- அம்மாவின் அவதார காலத்திலே நிகழ்ந்த நிகழ்வு..

# Brisbane – Mandram – Upcoming Events – November 2011



ஓம் சக்தி!

**Melmaruvathur Aadhiparasakthi Brisbane Mandram**

**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பிரிஸ்பேர்ண் மன்றம்**

**P.O.Box: 750, SumnerPark, BC, Qld 4074**



"Service and Devotion are the Eyes of Spirituality"

"Spirituality is knowing, understanding and realizing Thyself" – **Melmaruvathur Amma's Oracle.**

**Bajan:**
**5.00p.m to 7.00p.m.**

**13.11.2011**

**Sunday**

ஞாயிற்றுக்கிழமை – ஐப்பசி 27

**கூட்டுப்பிரார்த்தனை:**

மாலை 5.00 மணி முதல்
இரவு 7.00 மணி வரை

**671 Masonic Centre,**
**Seventeen Miles Rock Road, Sinnamon Park – Qld 4073**

Contacts:

| Sakthi Para | Sakthi Jegatheesan | Sakthi Thilaga Vijeyakumar |
|---|---|---|
| Mob: 0438 778 483 | 07-33550932 | 07-38234628 |

நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம் – நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்



**எங்களுக்கு மந்திரங்கள் தெரியாது**
**பூஜைகள் செய்யத் தெரியாது**
**கதறி உருகி அழத் தெரியாது**
**ஆனால், உன்னை நம்பினால்**
**கைவிட மாட்டாய் என்பது மட்டும்**
**சத்தியமாகத் தெரியும்**
**என் சத்திய தெய்வமே!**



## YOU DO NOT KNOW WHY YOU WERE BORN:

"The water in your blood is useful to you. It is not seen outside. Similarly you do not know why you are born"

_ **Melmaruvathur Amma's Oracle**

# திருமதி அம்மா பதில்கள்



இலட்சுமி பங்காரு அடிகளார்

**அம்மா அருள்வாக்கில் முக்தி தருவதாகச் சொன்னாள். ஆனால், பல நூறு ஜென்மங்கள் எடுத்துக் கலியுக தெய்வம் அடிகளார் அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்கிற என் விருப்பத்தைச் சொன்னதும், அம்மாவும் சரி, பிறவிகள் எடுத்துத் தொண்டு செய்! என்று சொல்லி எனக்குக் கருணை காட்டினாள்! இப்படி நான் கேட்டது சரியா? தவறா?.**

அம்மா முக்தி தருகிறேன் என்று சொன்னால் பேசாமல் வாங்கிக்கொள்ள வேண்டியதுதானே! ஏன் மறுபடியும் பலநூறு ஜென்மங்களைக் கேட்டீர்கள்? ஜென்மங்கள் எடுத்தால் தொண்டு செய்வதோடு முடிந்து விடுமா? இன்ப, துன்பங்களில் உழல வேண்டாமா? எல்லோரும் “இனி பிறவி வேண்டேன்” என்றுதான் கேட்பார்கள். நீங்கள் பலநூறு பிறவிகளைக் கேட்டிருக்கிறீர்கள். அம்மாவும் இவன் இன்னும் அனுபவிக்க நினைக்கிறான். சரி அனுபவி” என்று சொல்லியிருக்கிறாள். அம்மா சொல்வதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். மறுபடியும் உங்கள் விருப்பத்தைச் சொல்லியிருக்கக்கூடாது. உங்கள் தொண்டு போதும் என்று கருதித்தானே அன்னை முக்தி என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறாள்? ஏன் ஐயா! மறுபடியும் போய் வாழ்க்கை என்ற வலையில் சிக்க நினைக்கிறீர்கள்? இதே வாக்கை அம்மா என்னிடம் சொல்லியிருந்தால் “சரிம்மா! ரொம்ப சந்தோஷம்!” என்று விழுந்து கும்பிட்டு வந்திருப்பேன். வாய்ப்பை நழுவ விட்டுவிட்டீர்களே ஐயா!.

**அம்மா! உண்மையான ஆன்மிகவாதி யார்?**

புறவேடமில்லாமல், அகத்தைத் தூய்மையாக வைத்துக்கொண்டு சமுதாயத்திற்குப் பயனுள்ளவராக எவர் ஒருவர் வாழ்கின்றாரோ அவரே உண்மையான ஆன்மிகவாதி.

**செவ்வாடை அனைவரும் ஒரே குலம், ஒரே இரத்தம் என்பதை உணர்த்துகிறது. மஞ்சள் ஆடை அணிவதன் காரணம் என்ன?**

இருமுடி அணியும் சமயங்களில் ஒன்பது முறைக்கு மேல் இருமுடி செலுத்திய குருசாமிகள் மஞ்சள் ஆடை அணிய வேண்டும் என்று அம்மா கூறியிருக்கிறார்கள். பதினெட்டு முறைக்கு மேல் இருமுடி செலுத்தியவர்களுக்குப் பச்சை ஆடை தருகிறேன் என்று அம்மா கூறினார்கள்.

பதினெட்டு முடிந்தவுடன் “அம்மா நாங்களெல்லாம் பதினெட்டு முறை இருமுடி செலுத்திவிட்டோம். பச்சை ஆடை அணியலாமா?” என்று கேட்டோம். அதற்கு அம்மா அருள்வாக்கில் “நிறம் மாறினால் போதாது. மனம் மாற வேண்டும். நீங்களெல்லாம் இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை. போய் மஞ்சளையே போடுங்கள்” என்று கூறிவிட்டார்கள்.

மஞ்சள் ஆடையைக் குருசாமிகள் நம் இயக்கத்தில் சற்றே மூத்தவர்கள் என்பதைக் காட்டுவதற்காகத்தான் அணிகிறோம். அதையும் சக்திமாலை அணியும் சமயங்களில் மட்டுமே அணிகிறோம். மேலும் மஞ்சள் என்பது ஆன்மிகத்தில் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதையும் குறிக்கும் நிறமாகும்.

# ஆன்மிக நாட்குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 01.11.2011 | செவ்வாய் | ஐப்பசி | 15 | கந்தஷஷ்டி விரதம் - சூரசம்ஹாரம் |
| 06.11.2011 | ஞாயிறு | ஐப்பசி | 20 | உத்தான ஏகாதசி விரதம் |
| 08.11.2011 | செவ்வாய் | ஐப்பசி | 22 | பிரதோச விரதம் |
| 09.11.2011 | புதன் | ஐப்பசி | 23 | திருமூலர் குருபூசை |
| 10.11.2011 | வியாழன் | ஐப்பசி | 24 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 13.11.2011 | ஞாயிறு | ஐப்பசி | 27 | **திருவிளக்குப்பூஜை**<br>மெல்பேர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 14.11.2011 | திங்கள் | ஐப்பசி | 28 | சங்கடஹர சதுர்த்தி |
| 17.11.2011 | வியாழன் | கார்த்திகை | 01 | ஐயப்ப பக்தர்கள் மாலை அணிதல் -விரதம் |
| 20.11.2011 | ஞாயிறு | கார்த்திகை | 04 | மெய்ப்பொருளார் குருபூஜை |
| 21.11.2011 | திங்கள் | கார்த்திகை | 05 | ஏகாதசி விரதம் - 1ஆம் கார்த்திகை சோம வாரம் |
| 23.11.2011 | புதன் | கார்த்திகை | 07 | பிரதோஷ விரதம் |
| 24.11.2011 | வியாழன் | கார்த்திகை | 09 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 28.11.2011 | திங்கள் | கார்த்திகை | 12 | சதுர்த்தி விரதம் - 2ஆம் கார்த்திகை சோமவாரம் |
| 30.11.2011 | புதன் | கார்த்திகை | 14 | ஷஷ்டி விரதம் |
| 05.12.2011 | திங்கள் | கார்த்திகை | 19 | மூன்றாம் காத்திகை சோமவாரம் |
| 06.12.2011 | செவ்வாய் | கார்த்திகை | 20 | ஏகாதசி விரதம் |
| 07.12.2011 | புதன் | கார்த்திகை | 21 | பிரதோஷ விரதம் |
| 08.12.2011 | வியாழன் | கார்த்திகை | 22 | திருக்கார்த்திகை விரதம் - கார்த்திகை தீபம் - குமாராலய தீபம் |
| 09.12.2011 | வெள்ளி | கார்த்திகை | 23 | விஷ்ணுவாலயதீபம் |
| 10.12.2011 | சனி | கார்த்திகை | 24 | **பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் |
| 11.12.2011 | ஞாயிறு | கார்த்திகை | 25 | விநாயகர் விரதாரம்பம்<br>**திருவிளக்குப்பூஜை**<br>மெல்பேர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 12.12.2011 | திங்கள் | கார்த்திகை | 26 | நான்காம் காத்திகை சோமவாரம் |
| 14.12.2011 | புதன் | கார்த்திகை | 28 | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 16.12.2011 | வெள்ளி | கார்த்திகை | 30 | ஆறுமுகநாவலர் குருபூஜை |
| 21.12.2011 | புதன் | மார்கழி | 05 | ஏகாதசி விரதம் |
| 24.12.2011 | சனி | மார்கழி | 08 | **அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 28.12.2011 | புதன் | மார்கழி | 12 | சதுர்த்தி விரதம் |
| 30.12.2011 | வெள்ளி | மார்கழி | 14 | விநாயக ஷஷ்டி விரதம் - திருவெம்பாவை பூஜாராம்பம் |
| 05.01.2012 | வியாழன் | மார்கழி | 20 | ஸ்ரீ வைகுந்த ஏகாதசி |
| 08.01.2012 | ஞாயிறு | மார்கழி | 23 | ஆருத்திரா தரிசனம்,<br>**பௌர்ணமி தினம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>**பௌர்ணமி விளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம்<br>**திருவிளக்குப்பூஜை**<br>மெல்பேர்ண் ஆதிபராசக்தி மன்றம் ஒப் அவஸ்திரேலியா |
| 15.01.2012 | ஞாயிறு | தை | 01 | தைப்பொங்கல் |
| 22.01.2012 | ஞாயிறு | தை | 08 | **தை அமாவாசை**<br>**அமாவாசை விரதம் – 1008 மந்திரங்களுடன் கூட்டு வழிபாடு**<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் |
| 01.02.2012 | புதன் | தை | 18 | தை கார்த்திகை |
| 07.02.2012 | செவ்வாய் | தை | 24 | **தைப்பூசம்**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் தைப்பூச ஜோதி ஏற்றல் |

# Divine Miracles at Melmaruvathur

## Do you know what he thought while the Archana was going on:

It was the time when the Goddess had appeared as Swayambu in a thatched hut. A number of devotees who came was less. The Siddha Peetam had slender financial resources then! No one knew about the purpose of Mother's incarnation nor did they know about her power. At that time one of Mother's devotees spent Rs.3000 on Abishekam. He decorated the Siddha Peetham with flowers. That was the first Abishekam done for Mother. All the other devotees praised that man immensely for doing something they themselves had not done and could not do.

**Mother descended into Adigalar that evening and spoke:**

"Is such an elaborate and costly Abhishekam necessary for me now? Do you think that I will be appeased by this? He spent three thousand rupees, I would have been appeased if he had fed three hundred people. All of you are praising the man who did the Abhishekam. Do you know what was his real purpose? He had prayed saying 'Mother the cost of one kilo camphor is 60 rupees! Please take care of me. This was what in his mind' Mother could indeed discern the real motives of all actions.

□ □

## The man who submitted the fake bill and collected money which belonged to the temple

One Gentleman voluntarily accepted to buy electrical fittings for the temple and after collecting the list of items required went to a neighbouring town to buy the items. The items were bought for a sum of rupees 249.60. He submitted the bills to the temple authorities and requested them to reimburse him. In those days permission had to be taken from Mother even for small purchases. When a request for permission was submitted to Mother She said, "bring the man who had bought the items to me. When he came and stood before Mother she asked 'what items did you buy, my son?' He read out the bill. Electric wire for a big amount for Rs.7.20 was shown in the list and in fact it has not been bought. He had bought a less expensive wire and no one had noticed this. Mother asked him 'which wire did you buy, my son' he was immediately flustered and said 'I bought the 7.20 wire'. Mother asked, 'why did you buy this wire even though a less expensive one was suggested?' He had not expected this question. He said 'this wire is better than the other wire' Mother immediately said 'in that show my son? Why this the wire called 7.20 wire?' Mother started explaining the details of wire itself. Finally She said 'do not talk about things you do not know'. She then asked the temple authorities, 'pay him Rs.179 and close the accounts'.

The incident will serve as a lesson to those who come for divine revelation thinking that some meaningless activity is going on. One can witness Mother's compassion even in this event. She had not exposed the man who wanted to collect the extra money, before the others. She once said, 'no one listens to me. They tried to cheat even me. Temple money is misappropriated even as they chant the varios Mantras loudly. They think I am with them. I dwell only with those who obey my commends with affection and honestly.

*****